## <u>சாதாரணக்கூட்டம்</u>

2023–ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 24ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**திரு.மோ.செல்வராஜ்,**
**தலைவர்**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

<u>பொருள் எண்.1</u>

பள்ளிபாளையம் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் திருமதி.மு.தாமரை அவர்களின் ஏப்ரல்–2023 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1554/2014/சி1

**தீர்மான எண்.64 நாள். 24.04.2023**

பதிவு செய்யப்பட்டது.

<u>பொருள் எண்.2</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் ஜனவரி மாதம் 19.04.2023 –ந் தேதி வரை வசூல் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு உள்ளது. (ரூ. லட்சத்தில்)

| வ. எண். | வரியின விபரம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 1. | சொத்துவரி | 4.23 | 195.16 | 0.00 | 0.75 | 4.23 | 193.95 |
| 2. | காலியிட வரி | 1.40 | 3.27 | 0.00 | 0.01 | 1.40 | 3.26 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3. | தொழில்வரி | 13.58 | 8.16 | 3.44 | 0.02 | 10.14 | 8.14 |
| 4 | தண்ணீர் கட்டணம் | 6.80 | 70.76 | 0.17 | 0.11 | 6.63 | 70.65 |
| 5 | வரியில்லா இனம் | 0.00 | 0.25 | 0.00 | 0.25 | 0.00 | 0.00 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | 0.21 | 47.42 | 0.01 | 0.23 | 0.21 | 47.19 |
| | **மொத்தம்** | **26.23** | **325.02** | **3.62** | **1.37** | **22.61** | **323.65** |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1523/2013/சி1

**தீர்மான எண்.65 நாள். 24.04.2023**

பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்.3</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2022-2023–ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 11.04.2023 – ம் தேதி செவ்வாய் கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>நமக்கு நாமே திட்டம் –2022-2023</u>**<br>பள்ளிபாளையம் அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் தடுப்பு சுவர் கட்டுதல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல் | 10,05,000/- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.22% குறைவு |
| | | | ஸ்ரீ வீரமாத்தி அம்மன் டிரேடார்ஸ், 344,சுடமுத்தான்பட்டி, சிங்கம்பேட்டை, பவானி | 1.64 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.22% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.038/2022 /இ1

**தீர்மான எண்.66 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2022-2023–ம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 06.04.2023 – ம் தேதி வியாழக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **நமக்கு நாமே திட்டம் – 2022-23** வார்டு எண்.21 கண்ணணூர் மாரியம்மன் கோவில் அருகில் புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணி | 1,20,000/- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.12% குறைவு |
| | | | ஸ்ரீ வீரமாத்தி அம்மன் டிரேடார்ஸ், 344,சுடமுத்தான்பட்டி, சிங்கம்பேட்டை, பவானி | 0.90% கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.12% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண். 038/2022 /இ1

**தீர்மான எண்.67 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ‘‘அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும்‘‘ திட்டத்தினை பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்த குறைந்தபட்சம் 1000 சதுர அடியிலிருந்து 2500 சதுர அடி வரை இடம் அல்லது கட்டிடம் தேர்வு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 13.03.2023 அன்று சிற்றுண்டி அமைக்க இடம் தேர்வு செய்ய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஆய்வின் போது புதியதாக காலை சிற்றுண்டி அமைக்க நகராட்சி பகுதியில் போதிய இடம் இல்லாததால் ஆவாரங்காடு, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் கூடுதலாக உபயோகம் உள்ள கட்டிடம் நல்ல நிலையில் உள்ளதால், அக்கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு சுமார் ரூ.3,00,000/–மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.038/2022 /இ1

**தீர்மான எண்.68 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.6</u>

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் முதலமைச்சர் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 10.04.2023 – ம் தேதி திங்கட் கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எ | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>பொதுநிதி திட்டம் 2022–23</u> ஆவாரங்காடு, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் முதலமைச்சர் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 3,00,000 /- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.02% குறைவு |
| | | | ஸ்ரீ வீரமாத்தி அம்மன் டிரேடார்ஸ், 344,சுடமுத்தான்பட்டி, சிங்கம்பேட்டை, பவானி | 0.18 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.02% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.038/2022 /இ1

**தீர்மான எண்.69 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் 3–வது மாநில உயர்மட்டக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி பள்ளிபாளையம் நகராட்சி பகுதிகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் காவிரி ஆற்றில் கலக்காதவாறு தடுக்கும் பொருட்டு இரண்டு முக்கிய கழிவுநீர் கால்வாயினை தடுத்தலும் திருப்புதலும் பணிக்கு இரண்டு எண்ணிக்கை (1.50 MLD மற்றும் 3.50 MLD) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு ரூ.10.79 கோடிக்கு அனுமதி வழுங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை வழங்க ஒரு தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் ஒரு மாநில அளவிலான ஆங்கில தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. பணிக்கான விளம்பரம் செய்ததற்காக M/s.Vipras adz சென்னை அவர்களுக்கு ரூ. 59,745/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.0171/2022/இ1

**தீர்மான எண்.70 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.16600/2022/CFC–1 நாள்.21.03.2023 செயல்முறையின் படி, 15வது நிதிக்குழு மானியம் 2022–2023 ஆம் ஆண்டிற்கான Tied Grant-ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குத் தேவையான பேட்டரியால் இயங்கும் வாகனம் (Battery Operator Vechile) மற்றும் இலகு ரக (Light Commercial Vechile)

வாகனங்களை கொள்முதல் செய்து கொள்ள கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பள்ளிபாளையம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 12 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் வாகனம் (Battery Operator Vechile) கொள்முதல் செய்தல் | 24.00 |
| 2 | பள்ளிபாளையம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 5 எண்ணிக்கை இலகு ரக வாகனம் (Light Commercial Vechile) கொள்முதல் செய்தல் | 36.50 |
| | மொத்தம் | 60.50 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

கோப்பு எண்.0171/2022 /இ1

**தீர்மான எண்.71 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை செல்லும் வழியில் சனிசந்தை செயல்படுவதால், அவசர காலங்களில் காவல் நிலையத்திலிருந்து அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வாகனம் செல்லும் போது சனிசந்தை நடைபெறும் நாட்களில் அதிக கூட்ட நெரிசல் காரணமாக மருத்துவமனைக்கு செல்வது காலதாமதம் ஏற்படுகிறது. இக்கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு வார்டு எண் 15 சுபாஷ் நகர் பகுதியில் இருந்து அரசு மருத்துவமனைக்கு செல்ல ஏற்கனவே உள்ள சாலையில் உள்ள சிறுபாலத்தினை சீரமைப்பது அவசியமாகும். எனவே மேற்சொன்ன வழியில் சிறுபாலம் மற்றும் கேட் அமைப்பதற்கு ஆகும் செலவினம் ரூ. 2,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.0436/2023/ இ1

**தீர்மான எண்.72 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.10</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15ல் VKP கடை அருகில் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டு குடிநீர் தொட்டி கட்டிடம் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. இத்தொட்டி பழுதடைந்துள்ள காரணத்தினால் அப்பகுதி வாழ் பொதுமக்கள் மற்றும் அவ்வழி செல்லும் பொதுமக்கள் ஒருவித அச்ச உணர்வுடன் செல்வதாக நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்ற தலைவர் வாயிலாக தெரிவித்ததின் பேரில், இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி இடம் ஆய்வுசெய்யப்பட்டதில் குடிநீர் தொட்டி பழுதடைந்து பயனற்றதாக உள்ளது கண்டறியப்பட்டது. எனவே, குடிநீர் தொட்டியினை அகற்றுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். 0437/2023/ இ1

**தீர்மான எண்.73 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையம் சமயசங்கிலி கிராமத்தில் காவிரி ஆற்றங்கரையோரம் அமைந்துள்ளது. தலைமை நீரேற்று நிலையம் அமைக்கும் பணி கடந்த 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. இப்பணி நடைபெற்ற பொழுது, நீரேற்று நிலைய தண்ணீர் சேமிப்பு கிணற்றில் இருந்து ஆற்றின் நடுப்பகுதி வரை குழாய் அமைத்து தண்ணீர் வருவதற்கு குழாய்கள் பதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அப்பணி நிறைவடையாத காரணத்தினால் , குழாய்கள் அனைத்தும் ஆற்றிலேயே பயனற்று விடப்பட்டுள்ளது. தற்போது காவிரி ஆற்றில் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பபட்டுள்ளதால், குழாய்களை ஆற்றில் எடுத்து ஏலம் விடவும், அக்ரஹாரம் நீரேற்று நிலையத்தில் பயனற்று வைக்கப்பட்டுள்ள பொருட்களையும் சேர்த்து ஏலம் விடவும் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். 0438/2023/ இ1

**தீர்மான எண்.74 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.12</u>

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள நகர்மன்ற தலைவர், ஆணையாளர், மற்றும் நகர்மன்ற கூட்ட அரங்கு ஆகிய இடங்களில் குளிர்சாதன இயந்திரங்களில் பழுது ஏற்பட்டு சரிவர இயங்காத நிலையில் உள்ளது. ஏனவே, மேற்கண்ட இடங்களில் உள்ள மொத்தம் 5 குளிர்சாதன இயந்திரங்களில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்யவும், பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி பெற்றதில் ரூ.37,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 0439/2023/ இ1

**தீர்மான எண்.75 நாள். 24.04.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.13</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள நகர்மன்ற தலைவர், ஆணையாளர், மற்றும் நகர்மன்ற கூட்ட அரங்கில் உள்ள குளிர்சாதன இயந்திரங்கள் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ள 12.04.2023 ம் தேதி புதன் கிழமை மாலை 3.30 மணிக்கு கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கே.விஜய்பாபு,<br>ஏ.சி.மெக்கானிக்<br>23/ஏ7, ரூபி காம்பளக்ஸ்,பள்ளிபாளையம் | 36,900 .00 |
| 2 | எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்,<br>611, மேட்டூர் மெயின் ரோடு, பவானி. | 37,250.00 |
| 3 | கே.எஸ்.மாரியப்பன்,<br>716பி,குதிரைகல்மேடு,<br>காடப்பநல்லூர் (P.O), பவானி | 37,850.00 |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய கே.விஜய்பாபு அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 0439/2023/இ1

**தீர்மான எண்.76 நாள். 24.04.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 96 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, அதில் நீர்மூழ்கி மின்மோட்டாரினை இறக்கி பொதுமக்களுக்கு குடிநீரல்லாத தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் காலம் கோடைகாலமாக உள்ளதால், பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத தேவையினை பூர்த்தி செய்வதற்கும், உடனுக்குடன் நீர்மூழ்கி மின்மோட்டாரை பழுது நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பொருத்துவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. மேற்கண்ட பணி குடிநீர் தொடர்புடைய பணி என்பதால் பணியின் அவசர அவசியத்தை கருதி புதியதாக 7.50 திறன் கொண்ட கூடுதல் 5 எண்ணிக்கைகள் நீர்மூழ்கி மின்மோட்டார் கொள்முதல் செய்து இருப்பில் வைத்துக் கொள்ள தோராய மதிப்பீடு ரூ.6,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். 0440/2023/ இ1

**தீர்மான எண்.77 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

பள்ளிபாளையம் நகராட்சியில் 6 இடங்களில் 7 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது. இந்நகராட்சியில் ஒரே ஒரு குடிநீர் திறப்பாளர் மட்டும் பணியில் உள்ளார். நகராட்சியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளின் குடிநீர் பகிர்மான வால்வுகளை இயக்க பணியாளர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி அதன் அடிப்படையில் பணி மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஒப்பந்தப்புள்ளி ஏப்ரல் மாதத்துடன் முடிவுற்றதால் மறு

ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை அதே ஒப்பந்ததாரருக்கு அதே விலைப்புள்ளிக்கு மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 6மாதத்திற்கு நீட்டிப்பு செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.10,10,000/– க்கு குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண். 556 /2022/இ1

**தீர்மான எண்.78 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.16</u>**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகராட்சி குப்பை கிடங்கில் பயோ கேஸ் பவர் பிளாண்டின் மூலம் மின்சாரம் தயாரிக்கப்பட்டு தெருவிளக்கு மற்றும் பயோ கேஸ் பவர் பிளாண்டின் உட்பகுதியில் உள்ள மின் மோட்டார்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பிளாண்ட் இயக்குவதற்கு பணியாளர்களை பணியில் அமர்த்துவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதன் அடிப்படையில் ஆட்கள் பெறப்பட்டு பணி மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஒப்பந்தப்புள்ளி ஏப்ரல் மாதத்துடன் முடிவுற்றதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை அதே ஒப்பந்ததாரருக்கு அதே விலைப்புள்ளிக்கு மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 6 மாதத்திற்கு நீட்டிப்பு செய்ய தயாரிக்கப்பட்டுள்ள தோராய மதிப்பீடு ரூ.4,00,000/–க்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.557/2022/இ1

**தீர்மான எண்.79 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.17</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதிகளுக்கு புதிய தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 2 விசைப்பம்பு மின் மோட்டார்களும் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இரண்டு விசைப்பம்பு மின்மோட்டார்கள் பயன்படுத்தியும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மோட்டார்கள் அனைத்தும் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சியில் உள்ள மொத்தம் மூன்று மின்பணியாளர் பணியிடங்களில் இரண்டு மின்பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதனால் இரண்டு மின்பணியாளர்

கொண்டு அனைத்து மின்மோட்டார்களையும் இயக்கி பராமரிப்பிற்கு கடினமானதாக உள்ளது. மேலும் இம்மின்மோட்டார்களை இயக்கி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவது அவசியமாகும். மேலும் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க மின்மோட்டார்களை இயக்கி பராமரிக்க தேவையான மின்பணியாளர் நிலை – 1 ல் இரண்டு பேரும், மின்பணி உதவியாளர் இரண்டு பேரையும் கொண்டு பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி அதன் அடிப்படையில் பணியாளர்களை பணியில் அமர்த்துவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதன் அடிப்படையில் ஆட்கள் பெறப்பட்டு பணி மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஒப்பந்தப்புள்ளி ஏப்ரல் மாதத்துடன் முடிவுற்றதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை அதே ஒப்பந்ததாரருக்கு அதே விலைப்புள்ளிக்கு மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 6 மாதத்திற்கு நீட்டிப்பு செய்ய தயாரிக்கப்பட்டுள்ள தோராய மதிப்பீடு ரூ.6,50,000/–க்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.553 /2022/இ1

**தீர்மான எண்.80 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.18</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் 21 வார்டு பகுதிகளிலும் உள்ள மொத்தம் 93 விசைபம்பு மின் மோட்டார்களை பயன்படுத்தியும், பழைய தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 2 விசைப்பம்பு மின் மோட்டார்களை பயன்படுத்தியும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் மோட்டார்கள் அனைத்தும் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சியில் உள்ள மொத்தம் மூன்று மின்பணியாளர் பணியிடங்களில் இரண்டு மின்பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதனால் இரண்டு மின்பணியாளர் கொண்டு அனைத்து மின்மோட்டார்களையும் இயக்கி பராமரிப்பிற்கு கடினமானதாக உள்ளது. மேலும் இம்மின்மோட்டார்களை இயக்கி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவது அவசியமாகும். மேலும் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க மின்மோட்டார்களை இயக்கி பராமரிக்க தேவையான மின்பணியாளர் நிலை – 1 ல் இரண்டு பேரும், மின்பணி உதவியாளர் இரண்டு பேரையும் கொண்டு பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி அதன் அடிப்படையில் பணியாளர்களை பணியாளர்களை பணியில் அமர்த்துவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதன் அடிப்படையில் ஆட்கள் பெறப்பட்டு பணி மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஒப்பந்தப்புள்ளி ஏப்ரல் மாதத்துடன் முடிவுற்றதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை அதே

ஒப்பந்ததாரருக்கு அதே விலைப்புள்ளிக்கு மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 6 மாதத்திற்கு நீட்டிப்பு செய்ய தயாரிக்கப்பட்டுள்ள தோராய மதிப்பீடு ரூ.6,50,000/–க்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.554 /2022/இ1

**தீர்மான எண்.81 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.19</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் பைப் லைன் நீர்க்கசிவு, பொது சுகாதார பிரிவில் குப்பைகளை அப்புறப்படுத்துதல் மற்றும் மழைநீர் வாய்க்கால்களில் உள்ள அடைப்புகளை சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்கு மினி எர்த் மூவர் மூலம் பணிகொண்டு பார்த்து வரப்படுகிறது. அதனால் மினி எர்த் மூவர் வாகனத்தை இயக்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி இதன் அடிப்படையில் பணியாளர் மூலம் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் ஆவராங்காடு சனி சந்தை பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடம் உள்ளது. அவ்விடத்தினை சமூக விரோதிகளிடம் இருந்து பாதுகாக்க பாதுகாவலரை நியமிப்பது அவசியம் ஆகும். இந்நகராட்சியில் ஆட்கள் பற்றாக்குறை காரணமாக சமுதாயக்கூடத்திற்கு பாதுகாவலர் இல்லாத நிலையில் உள்ளது. இதுவரை நகராட்சி மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி அதன் அடிப்படையில் ஒப்பந்தப்பணியாளர்களை கொண்டு பாதுகாவலரை நியமனம் செய்து பாதுகாப்பு பணி பார்க்கப்பட்டு வருகிறது. தற்போது ஒப்பந்தப்புள்ளி ஏப்ரல் மாதத்துடன் முடிவுற்றதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை அதே ஒப்பந்ததாரருக்கு அதே விலைப்புள்ளிக்கு மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 6 மாதத்திற்கு நீட்டிப்பு செய்ய தயாரிக்கப்பட்டுள்ள தோராய மதிப்பீடு ரூ.2,60,000/–க்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.552 /2022/இ1

**தீர்மான எண்.82 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.20

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பழைய குளிர்சாதன பெட்டிக்கு பதிலாக புதிய குளிர்சாதனப்பெட்டி (D-Freezer) கொள்முதல் செய்யும் பணிக்கான 05.04.2023 தேதி திங்கட்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன்<br>5–6/327, கே.எஸ் நகர்,<br>பள்ளிபாளையம் | ரூ. 25,980/– |
| 2 | எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்,<br>611, மேட்டூர் மெயின் ரோடு,<br>பவானி. | ரூ.26,750/– |
| 3 | கே.சீரங்கன்,<br>196,ரங்கனூர்,<br>எலந்தகுட்டை,<br>பள்ளிபாளையம் | ரூ.27000/– |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.265/2023/இ1

**தீர்மான எண்.83 நாள். 24.04.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.21

பள்ளிபாயையம் நகராட்சிக்கு சொந்தமான சமயசங்கிலி தலைமை நீரேற்று நிலையத்தில் நான்கு மின் மோட்டார்கள் மற்றும் HDPE குழாய்கள் ஆகியவற்றை ஆற்றின் நடுவே தண்ணீர் ஆழம் உள்ள பகுதியில் இறக்கி அதன் மூலம் தண்ணீரை கிணற்றுக்கு கொண்டு வரும் பணிக்கான 06.04.2023ம் தேதி திங்கட்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன்<br>5–6/327, கே.எஸ் நகர்,<br>பள்ளிபாளையம் | ரூ. 52,970/– |
| 2 | எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன்,<br>611, மேட்டூர் மெயின் ரோடு,<br>பவானி. | ரூ.54,162/– |
| 3 | கே.சீரங்கன்,<br>196,ரங்கனுார்,<br>எலந்தகுட்டை,<br>பள்ளிபாளையம் | ரூ.54,221/– |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.289/2023/இ1

**தீர்மான எண்.84 நாள். 24.04.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.22</u>

நாமக்கல் மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்தில் அமைக்க பெற்ற விழாவிற்க்கு பொது மக்களுக்கு அடிப்படை வசதி செய்யும் பணிக்கான 06.02.2023ம் தேதி திங்கட்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கே.எஸ்.மாரியப்பன்,<br>716பி, குதிரைகல்மேடு, காடப்பநல்லுார் (P.O),<br>பவானி | ரூ. 49,678/– |
| 2 | கே.சீரங்கன்,<br>196,ரங்கனுார்,<br>எலந்தகுட்டை,<br>பள்ளிபாளையம் | ரூ.51,483/– |

| | | |
|---|---|---|
| 3 | எஸ்.ஏ.சக்கரபாணி அன்ட் சன், 611, மேட்டூர் மெயின் ரோடு, பவானி. | ரூ.53,289/– |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய கே.எஸ்.மாரியப்பன் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.80/2023/இ1

**தீர்மான எண்.85 நாள். 24.04.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.23</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொத்துவரி செலுத்த G.V. முகுந்தநாராயணன் என்பவர் ரூ.50000/–ற்கான காசோலை வழங்கினார். மேற்படி காசோலை காசாக்கப்படாமல் திரும்ப வரப்பெற்றதால் குமாரபாளையம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு (வழக்கு எண் STC 1509/2022) நடைபெற்று வந்தது. நீதிமன்றம் மூலம் G.V. முகுந்தநாராயணன் என்பவர் ரூ.50000/–ற்கான வங்கி வரைவோலை பள்ளிபாளையம் நகராட்சிக்கு வழங்கியதால், வழக்கானது நகராட்சிக்கு சாதகமாக முடிவுற்றது. எனவே வழக்காடு கட்டணம் ரூ.7000/–ஐ திரு.எம்.ரவி வழக்கறிஞர் திருச்செங்கோடு அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.789/2020/அ1

**தீர்மான எண்.86 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.24</u>

பள்ளிபாளையம் நகராட்சி பொருளாதாரத்தில் பின்தங்கிய நகராட்சியாக உள்ளது. நகராட்சியின் வரி வருவாயினை மட்டுமே வைத்து நகராட்சி நிர்வாகம் இயங்கி வருகிறது. வரி வருவாயினை உயர்வு செய்து பொது மக்களுக்கு அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்வதற்கு நிதி ஆதாரம் தேவைப்படுகிறது. பள்ளிபாளையம் நகராட்சியில் வரி வருவாயினைவிட செலவினம் கூடுதலாக உள்ளது. அதிகரிக்கும் செலவினங்களை சரி செய்ய நகராட்சியின் வருவாயை உயர்வு

செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்படும் விண்ணப்பதாரரின் சொத்து மதிப்பு கிரைய ஆவணத்தில் 1% சொத்து வரி பெயர் மாற்ற கட்டணமாக நிர்ணயம் செய்யவும், இதனை 01.04.2023 முதல் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

இந்நகராட்சி பணியாளர்களின் ஊதியம், தெருவிளக்கு, குடிநீர் மற்றும் பொது சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசிய பணியாளர்களின் செலவினங்களை ஈடு செய்வதற்கு பெயர் மாற்றக் கட்டணம் நிர்ணயம் அவசியமாகிறது. மேலும், மின் வாரியத்திற்கு மின் கட்டணம் ரூ.5.00 கோடி செலுத்த வேண்டியுள்ளதாலும், ஒப்பந்த பணியாளர்களின் 6–மாத ஊதியம் வழங்க வேண்டியுள்ளதாலும், பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்த தொகைகள் உரிய கணக்குகளில் செலுத்தாமல் நிலுவையாக உள்ளதாலும் மற்றும் வாகனங்களுக்குகான எரிபொருள் கொள்முதல் செய்த வகையில் பெருந்தொகை நிறுவனத்திற்கு செலுத்தபட வேண்டயுள்ளதாலும், மேற்காணும் சொத்துவரி பெயர் மாற்றக் கட்டணம் நிர்ணயம் செய்ய பரிந்துரை செய்யப்படுகிறது.

கட்டு எண்.320/2023/அ1

**தீர்மான எண்.87 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.25**

பள்ளிபாளையம் நகராட்சிக்கு, ஈகாட்டூர் பகுதியில் எலந்தக்குட்டை கிராமம் SFNo.365/2, 366/1B, 1C, 2A, 354/3,4,6,7. 361/5 மற்றும் 364/2C ஆகிய புல் எண்களில் 20,36 ஏக்கர் நிலம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக தனி நபர்களிமிருந்து நில ஆர்ஜிதம் செய்து கிரயப்பத்திர ஆவண எண் 2983/2003ன்படி 28.10.2003ல் வாங்கப்பட்டுள்ளது. இவ்விடத்திற்கு (20.36 ஏக்கர்) ந.க.எண்.5752/6/2/2008/09 (அ–16) மற்றும் 'A' பதிவேடுகளில் நகராட்சியின் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இடமானது, பழனிக்கவுண்டர் மற்றும் 33 நபர்களிடம் இருந்து நில எடுப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் 15ம் இலக்கமிட்ட கருப்பாயி W/o பழனியப்பன் என்பவரிடம் இருந்து 2.00 ஏக்கர் நிலம் பெறப்பட்டுள்ளது இது தொடர்பாக கருப்பாயி என்பவரின் மகன் P.சண்முகம் என்பவரால் மேற்படி நகராட்சிக்கு கிரயம் செய்து கொடுத்த 2.00 ஏக்கரில் 1/3 பங்கு தனக்கு உரிமை உள்ளது என OS.No. 8/2017ன்படி நகராட்சியை 2–ம் பிரதி வாதியாக சேர்த்து திருச்செங்கோடு கூடுதல் மாவட்ட வழக்கு மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கானது தற்சமயம் குமாரபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No. 242/2020 ன்படி

நடைபெற்று வந்தது. மேற்கண்ட வழக்கின் 09.03.2022 தேதியிட்ட நீதிமன்றத் தீர்ப்பானது வாதியின் தரப்பில் முதற்கட்ட (preliminary decree) தீர்ப்பாகி உள்ளது. எனவே, இது தொடர்பாக நகராட்சியின் சார்பில் மீண்டும் திருச்செங்கோடு மாவட்ட சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு தொடர்ந்து உரிய நடவடிக்கைகள் நகராட்சி சட்ட ஆலோசகர் திரு.M.ரங்கசாமி அவர்கள் வழியாக மேற்கொள்ளவும், மேற்முறையீடு வழக்கிற்கு உத்தேச செலவீனம் ரூ.20,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

மேலும் இப்பணியினை அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழக்கு தொடர்பான பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.318/2023/எப்1

**தீர்மான எண்.88 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.26</u>

பள்ளிபாளையம் அதிமுக நகர கழக செயலாளர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காவேரி ஆற்றுப் பாலத்தின் முன்பு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவுருவ சிலை மற்றும் 75 அடி உயர கழக கொடி கம்பம் அமைத்துக் கொள்வதற்கு அனுமதி கேட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு.

கோப்பு எண்.285/2023/எப் 1

**தீர்மான எண்.89 நாள். 24.04.2023**

பார்வையிட்டு பதிவுசெய்யப்பட்டது.

<u>பொருள் எண்.27</u>

பள்ளிபாளையம் நகர பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட அமைப்புச் செயலாளர், பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட காவேரி ஆற்றின் புதிய பாலம் அருகில் சுதந்திர போராட்ட வீரரும், முதுபெரும் அரசியல் தலைவருமான S.S ராமசாமி படையாச்சினருக்கு முழு உருவச்சிலை வைக்கவும், 84 அடி கொடி கம்பம் அமைத்து கொள்ளவும் அனுமதி கேட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு

.

கோப்பு எண்.403/2023/எப் 1

**தீர்மான எண்.90 நாள். 24.04.2023**

பார்வையிட்டு பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் எண்.28**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட சொத்து உரிமையாளர்கள் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரியினை ஏப்ரல் 30ஆம் தேதிக்குள் செலுத்தி 5% ஊக்கத்தொகை பெறலாம் என்ற நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செய்தி வெளியீடு (செய்தி வெளியீடு எண்.731 நாள். 18.04.2023) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.444/2022/அ1

**தீர்மான எண்.91 நாள். 24.04.2023**

பதிவுசெய்யப்பட்டது.

**பொருள் எண்.29**

பொதுசுகாதார பிரிவில் இயங்குகின்ற கீழ்கண்ட வாகனங்களுக்கு 2023 2024–ம் நிதியாண்டில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்ய கீழ்கண்ட வாகன வாரியாக உத்தேச செலவின தொகையினை தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வாகனம் எண் | வாகனத்தின் பெயர் | உத்தேச செலவின தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | TN34 AY 0875 | TATA ACE | 30,000/– |
| 2 | TN 34 AY 0838 | TATA ACE | 30,000/– |
| 3 | TN 34 AY 8480 | TATA ACE | 30,000/– |
| 4 | TN 34 AY 4624 | TATA ACE | 30,000/– |
| 5 | TN 34 Y 8462 | டிப்பர் லாரி | 50,000/– |
| 6 | TN 34 R 7644 | டிப்பர் லாரி | 50,000/– |

| | | | |
|---|---|---|---|
| 7 | TN 34 1359 | டிப்பர் லாரி | 40,000/– |
| 8 | TN 34 R 4132 | கழிவுநீர் ஊறிஞ்சும் வாகனம் | 40,000/– |

மேற்காணும் வாகனங்களுக்கு சில்லரை செலவினம் ரூ.3,00,000/– ஆகும். எனவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார பிரிவில் இயங்கும் வாகனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்ய உரிய உத்தேச செலவின தொகையான ரூ.3,00,000/–க்குள் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.457/2023/எச்1

**தீர்மான எண்.92 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.30</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பூச்சிகளால் பரவக்கூடிய மலேரியா, சிக்குன் குனியா, டெங்கு மற்றும் லெப்டேடோபைரோசிஸ் போன்ற நோய்களை பரப்பும் ஏடிஎஸ் முதிர்கொசுக்கள் குறித்து அளவீடுகள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக குமாரபாளையம் தாலுகா பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு குட்பட்ட பகுதிகளில் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள நோய்களை பரப்பும் முதிர்கொசுக்கள் தன் உடலில் வைரஸ் கிருமிகளை சுமந்து கொண்டு எந்த நேரத்திலும் நோய்களை பரப்பும் தருவயில் உள்ளது. எனவும், இவற்றை தடுக்க போர்க்கால அடிப்படையில் மருந்துகளை தெளிக்க உரிய நடவடிக்கைகள் மேற்க்கொள்ளுமாறு சேலம் மண்டல பூச்சிகள் வலலுநர் குழுவினர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் முதிர்கொசுக்களை ஒழிப்பு மற்றும் தடுப்பு பணிக்கு தேவையான பைரத்திரம் மருந்து ஏதும் இருப்பு இல்லாமல் உள்ளதால். தமிழ்நாடு மருந்து கழகம் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை–28 அவர்களின் கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள பைரத்திரம் மருந்து லிட்டர் 1–க்கு ரூ.1100/–ம் GST 18% தொகையான 198/–ம் மொத்தம் ரூ.1298/– வீதம் 650 லிட்டர்களுக்கான (650x1298=843700) ரூ.8,43,700/–க்கு தேவைக்கு ஏற்றவாறு அவ்வப்பொழுது அரசு சார்ந்த சார்பு நிறுவனமான M/s. D.D. 165,பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட்,

பென்னாகரம் என்ற நிறுவனத்தில் கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதாரம் டெங்கு, சிக்குன் குனியா, மலேரியா மற்றும் லெப்டோபைரோசிஸ் போன்ற நோய்களை பரப்பும் முதிர்க்கொசுக்களை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தேவையான பைரத்திரம் மருந்து 650 லிட்டர் ரூ.8,43,700/—க்கு M/s.D.D. 165,பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், பென்னாகரம் என்ற நிறுவனத்தில் கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.455 /2023/எச்1

**தீர்மான எண்.93 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.31</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனோ வைரஸ் தொற்றின் தாக்கம் தினசரி ஒன்று, இரண்டு என்ற அளவில் பதிவாகி வருகின்றது. எனவே மேற்காணும் தொற்று பாதிப்பு ஏற்பட்ட பகுதிகள் முழுவதும் கிருமிநாசினி பவுடர்கள் மற்றும் லைசால் மருந்து தெளிக்கப்பட வேண்டும். எனவே தற்பொழுது லைசால் கரைசல் இருப்பு ஏதும் இல்லாத நிலையில் உள்ளதால், நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை—28 அவர்களின் கடித ந.க.எண்.10608/2021/எச்2 நாள்.10.11.2021 நாளிட்ட கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டதின்படி லைசால் மருந்து லிட்டர் 1—க்கு ரூ.200/—ம் GST 18% ரூ.36/—ம் ஆகமொத்தம் லிட்டர் 1—க்கு ரூ.236/— ஆகும். ஆகவே கொரனோ வைரஸ் தொற்றை தடுக்கவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்க்கொள்ளும் பொருட்டு 3000 லிட்டர் லைசால் மருந்தினை ரூ.7,08,000/—க்கு அரசு சார்ந்த M/s. D.D , 165, பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், பென்னாகரம் என்ற நிறுவனத்தில், அவ்வப்பொழுது தேவைக்கேற்ப கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதாரம் கொரனோ வைரஸ் தொற்றினை தடுக்கவும், முன்னெச்சரிக்கைகள் நடவடிக்கைகள் மேற்க்கொள்ளவும் தேவையான லைசால் கரைசல் 300 லிட்டர் ரூ.7,08,000/—க்கு அரசு சார்ந்த M/s. D.D , 165, பென்னாகரம் வட்ட வேளாண்மை

உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், பென்னாகரம் என்ற நிறுவனத்தில், பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.454/2023/எச்1

**தீர்மான எண்.94 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.32</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள மழைநீர் வடிகால் கழிவுநீரில் வசிக்கின்ற க்யூலக்ஸ் வகை கொசுப்புழுக்களை கட்டுபடுத்தவும், தடுக்கவும் பாசில்லஸ் துரின்ஞ்ன்சிஸ் பவுடர் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே, மேற்படி பாசில்லஸ் துரின்ஞ்ன்சிஸ் பவுடர் கொள்முதல் செய்து அசுத்தமான மற்றும் மாசுப்பட்ட நீர்நிலைகளில் தெளிப்பான் மூலம் தெளிக்கப்பட்டு வருகின்றது. எனவே அசுத்த நீரில் வசிக்கும் க்யூலக்ஸ் வகை கொசுப்புழுக்களை அழிக்கவும், கட்டுப்படுத்தவும், தமிழ்நாடு மருந்து கழகம் சென்னை அவர்களால் பரிந்துரை செய்துள்ள விலையான லிட்டர் 1–க்கு 1047/–ம், GST 18% தொகையான ரூ.188.46/–ம் சேர்த்து ஒரு விட்டருக்கு ரூ.1235.46/– ஆகிறது. எனவே, 650 லிட்டருக்கு (650x1235.46=8,03,049) ரூ.8,03,049/–க்கு அவ்வப்போது தேவைக்கேற்ப அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனமான M/s. D.D. 165,பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், பென்னாகரம் என்ற நிறுவனத்திடம் கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதாரம், மாசுப்பட்ட நீர் மற்றும் அசுத்தமான நீர்நிலைகளில் வசிக்கும் க்யூலக்ஸ் வகை கொசுப்புழுக்களை அழிக்கவும், கட்டுப்படுத்தவும் தேவைப்படும் பாசில்லஸ் துரின்ஞ்ன்சிஸ் பவுடர் 650 கிலோ ரூ.8,03,049/–க்குள், அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனமான M/s.D.D. 165,பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், பென்னாகரம் என்ற நிறுவனத்தில் கொள்முதல் செய்யவும், இச்செலவினத்தை, நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.456/2023/எச்1

**தீர்மான எண்.95 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.33</u>

பள்ளிபாளையம் நகராட்சியின் 2022–2023–ம் ஆண்டுக்கான வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி ஆகிய மூன்று கணக்குகள் தயார் செய்ய 09.02.2023ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | A.V.ஸ்ரீதர் B.E.,<br>த/பெ A.வைரவேல்,<br>இ189,கூட்டப்பள்ளி காலனி,<br>திருச்செங்கோடு–637 214 | ரூ.1,50,000 /– |
| 2 | B.சுபத்ரா<br>த/பெ A.பாலசுப்ரமணியம்,<br>தேவனாங்குறிச்சி,<br>திருச்செங்கோடு | ரூ.1,60,000 /– |
| 3 | G.பிரியதர்ஷினி,M.Sc.,<br>த/பெ M.கணேசன்,<br>தோக்கவாடி,<br>திருச்செங்கோடு | ரூ.1,70,000 /– |

அலுவலக குறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.96 நாள். 24.04.2023**

அங்கீகரிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.34</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள காலி இடங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு மின்வாரியத்துறையின் மூலமாக தற்காலிக மின் இணைப்பு வழங்கப்படும் போது நகராட்சியின் தடையில்லாச் சான்று பெற்ற பின்னரே வழங்கப்பட வேண்டும்.

அவ்வாறு நகராட்சியில் தடையில்லாச் சான்று பெறாமல் வழங்கப்படும் மின்இணைப்பு கட்டிடங்களுக்கு நகராட்சியின் மூலம் மின்வாரியத்திற்கு கட்டிட முடிவறிக்கை வழங்க இயலாது என்பதை மன்றம் முடிவு செய்யலாம்.

கோப்பு எண்.460/2023/எப்1

**தீர்மான எண்.97 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.35</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட திருச்செங்கோடு சாலையில் சென்னை / கன்னியாகுமரி தொழிற்தடத்திட்டம் மூலம் புதிய உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இப்பணிக்காக சாலையின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு மழைநீர் வடிகால் அமைக்கும் முடிவு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், பாலம் அமைக்க RCC தூண்கள் நிறுவப்பட்டு வருகிறது. இப்பணி நிறைவடையும் பட்சத்தில் பாலத்தின் அடியில் தூண்களை ஒட்டி பூங்காக்கள் அமைக்கவும், சாலை divider கள் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலைத் துறையினர் தெரிவித்துள்ளார்கள். பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்கள் குறுகிய சாலைகள் கொண்டதாக உள்ளதால், மேற்சொன்ன பூங்காக்கள் மற்றும் divider கள் அமைக்கப்பட்டால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் ஒவ்வொரு குறுக்கு தெருக்களுக்கும் உள்ளே நுழையும் வழியில் வாகன நெரிசல் ஏற்படும். எனவே, அருகில் உள்ள ஈரோடு மாநகராட்சியில் அமைக்கப்பட்ட உயர்மட்ட மேம்பாலம் மாதிரி அடிப்படையில் பாலத்தின் அடியில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் வாகன நிறுத்துமிடத்தை போன்று பள்ளிபாளைத்திலும் வாகன நிறுத்துமிடம் அமைத்து இடையூறு இன்றி பொதுமக்கள் பயணிக்க நகர்மன்றத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி நெடுஞ்சாலை துறையினருக்கு கடிதம் அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.459 /2023/ இ1

**தீர்மான எண்.98 நாள். 24.04.2023**

அனுமதிக்கப்பட்டது.